சின்ன சின்னதாய்

➤ கோவை தடாகம் சாலை சிந்தி சர்வதேச பள்ளியில் நேற்று நடைபெற்ற மெகா உடல்நல பரிசோதனை முகாமில் பங்கேற்றோர்.

கோவை சிந்தி சர்வதேச பள்ளியில் மெகா உடல்நல பரிசோதனை முகாம்

■ கோவை

சிந்தி சர்வதேச பள்ளி, ராம் நகரில் உள்ள கோவை நீரிழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனை, ரோட்டரி கிளப் ஆப் கோயம்புத்தூர் சாய் சிட்டி சார்பில் பல்துறை சிறப்பு மெகா உடல்நல பரிசோதனை முகாம் கோவை தடாகம் சாலையில் உள்ள சிந்தி சர்வதேச பள்ளியில் நேற்று நடைபெற்றது.

இதுகுறித்து மருத்துவமனையின் தலைவர் ஆர்.பாலமுருகன் கூறியதாவது: கோவை நீரிழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையம் மற்றும் மருத்துவமனை, ராயல் கேர் மருத்துவமனை, பொன்னம்மாள் கண் மருத்துவமனை, பிரேம் பல் மருத்துவமனை மற்றும் இசை ஸ்பீச் அண்ட் ஹியரிங் கேர் சென்டர் இணைந்து இம்முகாமை நடத்தின. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்.

இம்முகாமில் குழந்தைகளுக்கு கண், காது, பல் போன்ற பரிசோதனைகளும், பெரியவர்களுக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், கண், இருதயம் போன்ற பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. கருத்தரங்கில் உடல் நல பாதுகாப்பு, உணவுமுறை ஆலோசனை, உடற்பயிற்சி குறித்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. சுகாதாரம் குறித்த சிறப்பு விழிப்புணர்வு அமர்வு நடத்தப்பட்டது.

முகாமில் பள்ளி தாளாளர் கமலேஷ் வி ரகேஜா, முதல்வர் பாக்கியலட்சுமி ஸ்ரீனிவாசன், சாய் சிட்டி ரோட்டரி கிளப் தலைவர் ஹால்துரை ஆகியோர் பங்கேற்றனர்.

➤ உடுமலை ஸ்ரீநிவாச வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விழாவில் பார்வையாளர்களை கவர்ந்த மாணவிகளின் நடனம்.

உடுமலை ஸ்ரீநிவாச வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா

■ உடுமலை

ஸ்ரீநிவாச வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விழா 'கிராண்டியர் 2025–26' சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவில் பள்ளித் தாளாளர் விக்னேஷ் ஆர். ரங்கநாதன் தலைமை வகித்தார். இயக்குநர் தீபா விக்னேஷ், முதல்வர் ஜாஸ்மின் ஜேக்கப் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர்.

பள்ளி மாணவி அனுமித்ரா வரவேற்றார். மேல்நிலை மற்றும் எஸ்எஸ்எல்ஸி பொது தேர்வுகளில் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், தனிப் பாடங்களில் 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் என மொத்தம் 87 மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேல்நிலை மற்றும் எஸ்எஸ்எல்ஸி பொதுத் தேர்வுகளில் 100 சதவீத தேர்ச்சி பெறச் செய்த 44 ஆசிரியர்களும் பாராட்டப்பட்டு பணமுடிப்புகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து, பள்ளி இசைக் குழுவின் இறை வணக்கப் பாடல், வரவேற்பு நடனம், மழலைச் செல்வங்களின் கண்கவர் நடனம், மாணவ மாணவிகளின் குழு நடனம், நாட்டிய நாடகம், மௌன மொழி நாடகம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இவ்விழாவில் 5000–க்கும் மேற்பட்ட பெற்றோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். விழாவில் பள்ளித் தாளாளர் விக்னேஷ் ஆர். ரங்கநாதன், இயக்குநர் தீபா விக்னேஷ், பள்ளி நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். பள்ளி மாணவி யாஷ்ணா சிவப்பிரகாசம் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை பள்ளி முதல்வர் ஜாஸ்மின் ஜேக்கப், நிர்வாக அலுவலர் டி.ஜவஹர், ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள்ஒருங்கிணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே

யானை தாக்கி வீட்டு காவலாளி உயிரிழப்பு

■ மஞ்சூர்

மஞ்சூர் அருகே கெத்தையில் தனியார் பண்ணை வீட்டு காவலாளியை யானை தாக்கியதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நீலகிரி வனக்கோட்டம் குந்தா சரகத்துக்கு உட்பட்டது பென் ஸ்டாக் பகுதி. இப்பகுதியில் தற்போது யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சுமார் 11.20 மணியளவில் குந்தா வனச்சரகம் குந்தா பிரிவு கெத்தை பென்ஸ்டாக் அருகே உள்ள தனியார் பண்ணை வீட்டின் அருகே விவசாய பகுதியில் காட்டுயானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது.

● பேர்லி சுகுந்த ராவ்

அதன் பேரில் வனப்பணியாளர்கள் அங்கு சென்று பார்த்த போது பேர்லி சுகுந்த ராவ்(35) என்பவர் விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்வேலி அருகே காட்டு யானை தாக்கி உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது. பேர்லி சுகுந்த ராவ் அந்த பண்ணை வீட்டின் காவலாளியாக பணிபுரிந்து வந்தார்.

அவரது உடலை மீட்ட வனத்துறையினர் பிரேத பரிசோதனைக்காக மஞ்சூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

தேவாலா - வாழவயல் பகுதியில் வீடு இழந்தவருக்கு நிவாரணம்

■ கூடலூர்

நீலகிரி மாவட்டம், நெல்லியாளம் நகராட்சிக்கு உட்பட்ட தேவாலா பகுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையால் வீடு இடிந்து விழுந்து, சாலையில் மண் சரிவு ஏற்பட்டது. திமுக மாவட்ட பொறுப்பாளர் கே.எம். ராஜு நேற்று அப்பகுதியை நேரில் பார்வையிட்டார்.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்கி ஆறுதல் கூறினார்.

ஆய்வின் போது, மாவட்ட அவை தலைவர் போஜன், முன்னாள் எம்எல்ஏ திராவிடமணி, நெல்லியாளம் நகரமன்ற தலைவர் சிவகாமி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

கோயில் நிலத்தை மீட்க கோரிக்கை

■ பொள்ளாச்சி

கிணத்துக்கடவு அருகேயுள்ள வடசித்தூர் ஊராட்சியில், இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான கரிவரதராஜ பெருமாள் கோயில் உள்ளது. மிகவும் பழமைவாய்ந்த இந்தக் கோயிலில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பதாக பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அம்மனுவில் கூறியிருப்பதாவது: வடசித்தூர் கரிவரதராஜ பெருமாள் கோயில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரால் கட்டப்பட்டது. கோயிலில் நாச்சியார் அம்மன் சன்னதி சுவரில் இருக்கும் கல்வெட்டில் உள்ள பெயர்களை சில மர்ம நபர்கள் அழித்து, மகாலட்சுமி தாயார் என்ற பெயரில் கோயிலை பெயர் மாற்றம் செய்து, வரலாற்றை மறைத்து பூர்வீக நிலம் 10.5 ஏக்கர் மற்றும் சிலை ஆகியவற்றில் முறைகேடு செய்துள்ளனர். தற்போது கோயில் நிலத்தில் உள்ள பட்டாவிலும் தனிநபர் பெயருக்கு மாற்றம் செய்து விற்பனையும் செய்யப்பட்டுள்ளது.

கோயிலின் வரலாற்றை மாற்றி நிலத்தை அபகரிக்க நினைக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கோயில் நிலத்தை கோயிலின் பெயருக்கு மாற்ற வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெம்ஸ்டோன் நகை தொகுப்பு 'வியனா' மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் அறிமுகம்

செப்.7 வரை சேதாரத்தில் 25% சிறப்பு தள்ளுபடி

■ சென்னை

மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் சார்பில் 'வியனா' எனும் தனித்துவமிக்க ஜெம்ஸ்டோன் நகைகளின் தொகுப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உலகளவில் மிகப்பெரிய மற்றும் நம்பகமான நகை சில்லறை விற்பனை நிறுவனங்களில் ஒன்றான மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் ஒவ்வொரு பெண்ணின் தனித்துவத்தைக் கொண்டாடும் புதிய ஜெம்ஸ்டோன் நகைகளான வியனா-வை அறிமுகப்படுத்தியுள்ளது. வைரத்தின் ஜொலிப்பையும் வைப்ரண்டான ஜெம்ஸ்டோன்களையும் இணைத்து 18 காரட் மற்றும் 22 காரட் தங்கத்தில் வியனா மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பானது நவநாகரீகமாகவும், சிரமமின்றியும் அணியக் கூடியமென்மையான, குறைந்த எடையுடைய பாரம்பரியமான, டிரெண்டியான நவீன பெண்களுக்கும் ஏற்றது. கூடுதலாக, ஜெம்ஸ்டோன்கள் மற்றும் பட்டை தீட்டப்படாத வைரங்களைக் கொண்ட பல்வேறு பாரம்பரிய நகைத் தொகுப்புகளையும், ஜெம்ஸ்டோன்கள் நகை விழாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்த விழாவின் ஒரு பகுதியாக,

வாடிக்கையாளர்கள் அனைத்து ஜெம்ஸ்டோன்கள் மற்றும் அன்கட் வைர நகைகளுக்கு சேதாரத்தில் 25 சதவீதம் வரை தள்ளுபடி பெறலாம். இந்த சிறப்புச் சலுகை செப்.7 வரை மட்டுமே. மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் பொருந்தும்.

இதை அறிமுகம் செய்து பேசிய, மலபார் குழுமத்தின் தலைவர் திரு. எம்.பி. அகமத், "வியனா என்பது ஒரு ஆபரணத் தொகுப்புக்கும் மேலானது. ஒவ்வொரு ஜெம்ஸ்டோனும் வலிமை, அழகு, மற்றும் தனத்துவமிக்கது" என்றார்.

பிராண்டின் தூதர் ஸ்ரீநிதி ஷெட்டி இடம்பெறும், 'ஜஸ்ட் லைக் மீ' என்ற தலைப்பிலான பிரச்சாரத்தால் வியானா வாடிக்கையாளர்களை கவர்கிறது. உலகளாவிய அழகியலை இந்திய நகைகளாக உருவாக்குவதை வியனா உறுதிப்படுத்துகிறது. உலகளவில் 15 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

நகை விற்பனைகளுக்கு அப்பால் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, பெண்களுக்கு அதிகாரமளித்தல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் பசிஒழிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் சிஎஸ்ஆர் முயற்சிகளுக்கு மலபார் கோல்டு அண்டு டைமண்ட்ஸ் நிறுவனத்திந் லாபத்தில் 5 சதவீதம் ஒதுக்குகிறது. இதனை இந்நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு அனுப்பலாம்.

இந்து தமிழ் திசை
செய்திப்பிரிவு,
391/1–391/2, காமராஜ் சாலை, உப்பிலிபாளையம், கோவை–641015.
மின்னஞ்சல் முகவரி: repkovai@hindutamil.co.in

HINDUJA HOUSING FINANCE

இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
தலைமை அலுவலகம்: 167-169, 2 வது தளம், அண்ணா சாலை, சின்னமலை, கைதாப்பேட்டை, சென்னை – 600015.
கிளை அலுவலகம்: எண்.89, அன்சாரி தெரு, ராம் நகர், கோயம்புத்தூர் – 641009.

பிற்சேர்க்கை–IV சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்காக)

பிணைகாப்பு, நிதிசொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைகாப்பு அமலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 கீழ் 13 (12), உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 3ன் கீழ் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் கீழே கையொப்பமிட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் எங்களது சென்னை கிளை மூலமாக கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவை தொகையை கேட்பு அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் செலுத்தும்படி கோரப்பட்டது.

கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையை முழுவதும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டுள்ளவர்கள் தனக்குள்ள அதிகாரத்தின் மூலம் கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பிணைகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 விதி 8 பிரிவு 13 உட்பிரிவு 4-ன் கீழ், கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் சுவாதீனம் செய்துள்ளார் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்கள்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

இதன் மூலம் கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதான பேரங்களும் வைத்து கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது. மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பேரம் வைத்து கொண்டால் அது இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள நிலுவை தொகை மற்றும் பின் வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது

கிளை: கோயம்புத்தூர், கடன்தாரர்: திரு. விக்னேஷ்வரன் கல்யாணகுமார், இணை கடன்தாரர்: திருமதி. சுகன்யா மணி, இருவரும் வசிப்பது எண்: 3/903/5, விநோபா நகர்மொடுவாய், அவனாசிபாளையம், திருப்பூர், தமிழ்நாடு, இந்தியா–638660. கடன் கணக்கு எண்: TN/CBT/CMBT/A000000066, **கேட்பு அறிவிப்பு தேதி:** 10.05.2025, **நிலுவைத் தொகை ரூ.** 19,25,336/- **மற்றும் வட்டியுடன், சுவாதீன தேதி:** 26.08.2025.

அசையா சொத்துக்களின் விபரங்கள்: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் துணை பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு தாலுகா, பொங்கலூர் ஒன்றியம், தெக்கலூர் கிராமத்தில் அமைந்துள்ள வருவாய் கிராம எல்லை, தெக்கலூர் கிராம எல்லை, தெக்கலூர் கிராம எல்லை, தெக்கலூர